**சுருக்கம்**

தெரிவுகள் – தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தெரிவு முகமைகளால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளில் தமிழ் மொழித் தகுதித் தேர்வினை எழுதுவதிலிருந்து மாற்றுத்திறனாளி தேர்வர்களுக்கு விலக்களித்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**மனிதவள மேலாண்மை (எம்)த் துறை**

அரசாணை (நிலை) எண்.49 நாள்: 23.05.2022

சுபகிருது வருடம், வைகாசி – 09,
திருவள்ளுவர் ஆண்டு 2053

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.133, மனிதவள மேலாண்மை (எம்) துறை, நாள் 01.12.2021.
2. செவித்திறன் குறைபாடு உள்ளவர்களின் பெற்றோர் சங்கத்தின் செயலாளரின், 01.03.2022-ம் நாளிட்ட மனு
3. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், கடித எண்.5476/RND-E/2018, நாள் 05.05.2022

******

**ஆணை :**

மேலே படிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண்.133, மனிதவள மேலாண்மை (எம்) துறை, நாள் 01.12.2021-ல் அரசுத் துறைகளில் உள்ள பணியிடங்கள் அனைத்திலும் தமிழக இளைஞர்கள் பெருமளவில் நியமனம் பெற ஏதுவாக, மாநிலத்தின் தெரிவு முகமைகளால் நடத்தப்படும் அனைத்துப் போட்டித் தேர்வுகளிலும் தமிழ்மொழி தகுதித்தாள் கட்டாயமாக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டன. அவ்வரசாணைக்கிணங்க, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், போட்டித் தேர்வுகளில் தமிழ் மொழித் தாளினை கட்டாயத்தாளாக இணைத்து, அதற்கேற்ப அறிவிக்கைகளை வெளியிட்டு தெரிவு நடவடிக்கையினை மேற்கொண்டுவருகிறது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட, செவித்திறன் குறைபாடு உள்ளவர்களின் பெற்றோர் சங்கத்தின் மனுவில், காது கேளாத மற்றும் வாய்பேச

(த.பி.பா.)

இயலாத மாற்றுத்திறனாளிகள், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளைக் கற்க சிரமப்படுவார்கள் என்றும், இம்மாணவ மாணவியர்கள் சிலர் முன்பருவபள்ளி முதல் பட்டப்படிப்பு வரை முழுமையாக ஆங்கில வழிக் கல்வியில் மட்டுமே கல்வி கற்றிருப்பார்கள் எனத் தெரிவித்து தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படுகின்ற தொகுதி-IV பதவிகளுக்கான போட்டித் தேர்வில் இத்தேர்வர்களுக்கு தமிழ் மொழித் தகுதித் தேர்வு எழுதுவதிலிருந்து விலக்களித்து அவர்களுக்கென தனியாக பொது ஆங்கில தாளினை நடத்த கோரியுள்ளனர்.

3. மேற்காணும் கோரிக்கை குறித்து மாற்றுத்திறனாளிகள் நலத்துறையுடன் கலந்தாலோசிக்கப்பட்டது. மேலும், இது குறித்து மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலாளர் வழங்கியுள்ள குறிப்புரையினை ஏற்று, அரசாணை (நிலை) எண்.133, மனிதவள மேலாண்மை (எம்) துறை, நாள் 01.12.2021-ல் ஆணையிடப்பட்டுள்ள கட்டாய தமிழ்மொழி தகுதித் தேர்வினை எழுதுவதற்கு மாற்றுத் திறனாளிகளுக்கு விலக்களித்து அரசு பின்வருமாறு ஆணையிடுகிறது:-

(அ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால், நடத்தப்படும் தொகுதி - I, II, II-A போன்ற இரண்டு நிலைகளைக் கொண்ட தேர்வுகளில், முதன்மை எழுத்துத்தேர்வில் (Main Written exam) கட்டாய தமிழ்மொழித்தாளானது தகுதி தேர்வாக (Tamil eligibility Test) நடத்தப்படுகிறது. இதுபோன்ற தேர்வுகளில் கட்டாயத் தமிழ்மொழி தகுதித் தாளினை எழுதுவதிலிருந்து மாற்றுத் திறனாளிகளுக்கு விலக்களிக்கப்படுகிறது.

(ஆ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால், நடத்தப்படும் தொகுதி-III, IV, VII-B, VIII, போன்ற ஒரே நிலை கொண்ட தேர்வுகளில் தமிழ் மொழித்தாளானது, தகுதி மற்றும் மதிப்பீட்டுத் தேர்வாக (Tamil Eligibility-cum-Scoring Test) நடத்தப்படுகிறது. இத்தேர்வுகளில், Board / University-ல் ஆங்கில மொழிப் பாடம் மட்டுமே படித்த மாற்றுத்திறனாளிகளுக்கு, தமிழ் மொழித்தாள் எழுதுவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. அதற்குபதில், ranking மதிப்பீடு செய்வதற்காக, அவர்களுக்கென்று தனியாக பொது ஆங்கிலத்தேர்வு (SSLC standard-ல்) நடத்தப்படும். (இத்தேர்வுகளில் மொழி பெயர்ப்புப்பகுதி இடம் பெறாது).

(இ) அரசாணை (நிலை) எண்.133, மனிதவள மேலாண்மை (எம்) துறை, நாள் 01.12.2021-ல் ஆணையிடப்பட்டுள்ள கட்டாய தமிழ் மொழித் தாளிலிருந்து மாற்றுத்திறனாளிகளுக்கான விலக்கு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மட்டுமல்லாமல், மாநிலத்தின் மற்ற தெரிவு முகமைகளால் நடத்தப்படும் அனைத்து போட்டித் தேர்வுகளுக்கும் மற்றும் நியமன அலுவலர்களால் தேவைப்படும் நேர்வுகளில் நடத்தப்படும் எழுத்துத் தேர்வுகளுக்கும் பொருந்தும்.

(ஈ) இவ்வாறான விலக்கு, அரசாணை (நிலை) எண்.62, பள்ளிக் கல்வித்துறை, நாள் 25.03.2022ல் குறிப்பிடப்பட்டுள்ள மாற்றுத் திறனாளிகளுக்குப்

பொருந்தும். மேற்காண் அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள மாற்றுத்திறனாளிகளின் தொடர்பான விவரப் பட்டியல் கீழ்கண்டவாறு:-

| | | |
|---|---|---|
| (1) | உடல்குறைபாடு - உடல் இயக்கக் குறைபாடு | Physical disability - Locomotor disability, Leprosy cured, Cerebral palsy, Dwarfism, Muscular Dystrophy, Acid Attack victims. |
| (2) | உடல் குறைபாடு - பார்வைக் குறைபாடு | Physical disability - Visual Impairment - Blindness, Low Vision |
| (3) | உடல் குறைபாடு - செவித்திறன் குறைபாடு | Physical disability - Hearing Impairment - Deafness, Hard of hearing |
| (4) | உடல் குறைபாடு - பேச்சு மற்றும் மொழித்திறன் குறைபாடு | Physical disability - Speech and Language disability |
| (5) | அறிவுசார் குறைபாடு | Intellectual disability, Specific Learning disability (Dyslexia, Dysgraphia, Dyscalculia, Dysprasia), Developmental Aphasia, Autism Spectrum Disorder |
| (6) | மன நலம் சார்ந்த குறைபாடு - மனநலம் பாதிப்பு | Mental Behaviour - Mental illness |
| (7) | நாள் பட்ட நரம்பியல் குறைபாடுகள் | Disability caused due to Chronic Neurological conditions, Multiple Sclerosis, Parkinson's disease, Haemophilia, Thalassemia, Sickle Cell disease |
| (8) | பன்முகக் குறைபாடுகள் (பார்வையின்மையோடு செவித்திறன் குறைபாடு உட்பட) | Multiple Disabilities including deaf, blindness |

இவ்விலக்கு 40 சதவிதத்திற்கும் குறைவான குறைபாடுகளைக் கொண்ட மாற்றுத் திறனாளிகளுக்கும் பொருந்தும்.

(உ) இவ்விலக்கினை பெறவிரும்பும் மாற்றுத்திறனாளிகள் உரிய மாற்றுத்திறனாளி சான்றிதழ் (Disability Certificate) சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

மைதிலி கே.ராஜேந்திரன்
அரசு செயலாளர்

**பெறுநர்**

செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை - 600 003.

அரசுக் கூடுதல் தலைமைச் செயலாளர், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை, சென்னை - 600 009.

(த.பி.பா.)

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித்துறை, சென்னை - 600 009.
அரசு முதன்மை செயலாளர், பள்ளிக் கல்வி துறை, சென்னை - 600 009.
அரசு முதன்மை செயலாளர், உயர்க் கல்வி துறை, சென்னை - 600 009.
அரசு முதன்மை செயலாளர், மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை, சென்னை - 600 009.
அரசு முதன்மை செயலாளர், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, சென்னை - 600 009.
அரசு செயலாளர், மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை - 600 009.
அனைத்து துறைச் செயலாளர்கள், சென்னை - 600 009.
அனைத்து துறைத் தலைவர்கள்.
தலைவர், ஆசிரியர் தேர்வு வாரியம், கல்லூரிச் சாலை, சென்னை - 600 006.
தலைவர், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், சென்னை - 600 018.
தலைவர், தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வு வாரியம், சென்னை - 600 002.
உறுப்பினர் செயலர், தமிழ்நாடு வனச் சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம், சென்னை - 600015.
இயக்குநர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, சென்னை - 600 032.
நிதி (பொ.நி.மா.க) துறை, சென்னை - 600 009.

**நகல்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர் -III, முதலமைச்சர் அலுவலகம், சென்னை - 600 009.
மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனிதவள மேலாண்மை) அவர்களின் சிறப்புநிலை நேர்முக உதவியாளர், சென்னை- 600 009.
தலைமைச் செயலாளரின் முதன்மை தனிச்செயலர், சென்னை - 600 009.
மாற்றுத்திறனாளிகள் நலத்துறை இயக்குநர், சென்னை - 600 005.
மனிதவள மேலாண்மைத் துறைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலாளர், சென்னை- 600 009.
மனிதவள மேலாண்மை (நி.சீ.II) துறை, சென்னை- 600 009. (3 படிகள்)
(தமிழ்நாடு அரசு இணையதளத்தில் வெளியிடுதல் குறித்து)
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

23/5/22
பிரிவு அலுவலர்

23/05/22